தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**
www.tsch.org.au
info@tsch.org.au

**பேச்சுப்போட்டி 2022** **ஆண்டு நான்கு**

அனைவருக்கும் வணக்கம்

# நட்பு

"*உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு*" என்றார் திருவள்ளுவர்.

ஆபத்து நேரத்தில் உதவுவதே நட்பு. நாம் சிரிக்கும்போது சிரித்து அழும்போது கூட அழுபவர்தான் நட்புக்குரியவர்.

நண்பர்கள் மூன்று வகைப்படுவர். முதலாவது வகையினர் பனை மரம் போன்றவர்கள். பனை மரம் தானாகவே முளைத்து, வளர்ந்து நமக்குப் பயன் தருகிறது. அதுபோல எம்மிடம் எந்த உதவியையும் எதிர்பாராது எமக்கு உதவுபவர்கள் இவர்கள்.

இரண்டாம் வகையினர் தென்னை மரம் போன்றவர்கள். தென்னைக்குத் தண்ணீர் ஊற்றி வளர்த்தால்தான் அது பயன் தரும். அதைப்போல நம்மிடம் உதவியை எதிர்பார்த்து நண்பர்களாக இருப்பவர்கள் இவர்கள்.

மூன்றாவது வகையினர் வாழைமரம் போன்றவர்கள். தினமும் தண்ணீர ஊற்றினால்தான் வாழை பயன் தரும். அதுபோல இவர்கள் எம்மிடம் உதவி பெற்றால்தான் எமக்கு உதவுவர்.

நாம் பனை மரம் போன்ற இயல்புடையோரின் நட்பைப் பேணுவோம். நல்ல நண்பர்களால் நம் வாழ்வு வளம் பெறும்.

நன்றி
வணக்கம்